Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 16 | 30- 06 - 94 | வியாழக்கிழமை | ஓசை 132

## வியாழனின் துணைக் கோளொன்றில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிப்பு

வியாழன் கிரகத்தின் துணைக் கோளான ''அயோ''வில் தண்ணீர் இருக்கிறது என்பதற்கான திட்டமான ஆதாரங்களை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். வியாழன் கிரகத்தின் பதின்நான்கு துணைக் கோள்களிலும் தண்ணீர் உறை நிலையில் இருக்கிறது. எனினும் அயோ துணைக் கிரகத்தில் உள்ள எரிமலைகளின் காரணமாக அங்குள்ள பனிக்கட்டி முழுவதும் ஆவியாகி இருக்கலாம் என்றே விஞ்ஞானிகள் கருதினர். ஆனால் இப்போது அங்கு தண்ணீர் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பது விஞ்ஞானிகளுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தேர்தலில் இ. தொ. கா - முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவைப் பெற ஐ. தே. க. தீவிர முயற்சி!

## முரண்பாடுகளைத் தீர்க்கநடவடிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கு திரு. தொண்டமானை தலைவராகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும் அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப்பை தலைவராகக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸினதும் ஒத்துழைப்பைப் பெறுவதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடம் தீவிர அக்கறை காட்டுவதாகத் தெரியவருகின்றது. இதன் ஒரு கட்டமாக, இ. தொ. காவுடன் உள்ள முரண்பாடுகள் சிலவற்றைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளதோடு, முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளது.

கடந்த 17 வருட காலமாக இ. தொ. கா. ஐ தே. கவிற்கு ஆதரவு வழங்கி வருகின்ற போதும் இம்முறை ஐ. தே. க. வின் வெற்றி வாய்ப்பு ப்பற்றி எழுந்துள்ள சந்தேகத்தினாலும், சில இ. தொ. கா. உறுப்பினர்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என வற்புறுத்தி தினாலும், இ. தொ. கா. தனது நிலைப்பாடு குறித்து பரிசீலனை செய்வதாக அறிய வருகின்றது.

இந்நிலையில் இ. தொ. காவின் ஆதரவைப் பெறுவதில் ஐ. தே. க. தலைமைப்பீடம் தீவிர அக்கறை காட்டுவதாகத் தெரிகின்றது. ஐ. தே. க. இன்றுள்ள நிலையில், இ. தொ, கா. ஆதரவு அவசியம் என்பதினால், இ. தொ. கா.வுடனான முரண்பாடுகளை தீர்க்கும் முயற்சியிலும் ஐ. தே. க. தீவிர கவனம் செலுத்துவதாக அறிய வருகின்றது.

இதன்ஒரு கட்டமாக மத்தியமாகாணசபையின் உல்லா சப்பயண, கால் நடை மற்றும் தமிழ் கல்வி அமைச்சராக இ. தொ. கா. உறுப்பினர் எஸ் சதாசிவம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள இளைஞரை காப்பாற்றவே இந்திய ராணுவத்தை அழைத்தோம்

- காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

'வடக்கு-கிழக்கு யுத்தத்திற்காக வருடம் செலவிடும் பணம் மகாவலித் திட்டத்திற்கு செலவிடப்பட்ட பணத்தின் பாதியாகும். அமைச்சரவைக்கும் கூறாமல் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதன் பலாபலனை இன்று அனுபவிக்கின்றோம். எமது இளைஞர்கள் போரில் பலியாவது தொடர்வதை அனுமதிக்கக் கூடாது. இதற்காகவே இந்தியப் படைகளை இங்கு வரவழைத்தோம். இவ்வாறு காமினி திசாநாயக்கா மாத்தறையில் நடந்த ஐ. தே. க. கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காணவே இந்தியப்படைகளை அழைத்தோம் நோயை சுகப்படுத்த கசப்பான மருந்தையேனும் பாவிக்க வேண்டும். இன்று நாட்டில் வேலையில்லா திண்டாட்டமும் வடக்கு - கிழக்கு பிரச்சினையுமே உள்ளது எனவும் காமினி மேலும் தெரிவித்தார்.

## வல்வெட்டித்துறைக் கடலில் மீனவர் மீது தாக்குதல்

### ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவ இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இக் கடற்பரப்பில் நேற்றுக் காலை 6. 00 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

இப் பகுதியில்தொழிலில்ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி இரண்டு 'டோறா'

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தனித்துப் போட்டியிடுவது குறித்து இ.தொ. கா. தேசியசபை ஆராய்வு

## மட்டு. மாவட்டத்தில் பொலிசார் மீது தாக்குதல்

## மீனவர் உணவு முத்திரை; மீண்டும் வழங்க கோரிக்கை

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இம்முறை தேர்தலில் தமிழ் வாக்காளர் பெரும் எண்ணிக்கையில் வாழும் மாவட்டங்களில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற கருத்து குறித்து கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய சபை, நிர்வாக சபைக் கூட்டங்களில் தீவிரமாக ஆராயப்பட்டதாக தெரிய வருகிறது.

தேர்தலில் வெற்றி பெறும் தரப்பினரை தீர்மானிக்கக் கூடிய அளவுக்கு தமிழ் வாக்காளர்களைக் கொண்ட மாவட்டங்களில் கூட்டுச் சேர்ந்து போட்டியிட வேண்டும் என்ற கருத்தும் இ.தொ.கா வுக்குள் நிலவுவதாக அறிய முடிகின்றது.

# இ. தொ. காவுடன் இணைந்து விட்டுக் கொடுத்து செயற்படுக

## செல்லச்சாமிக்கு ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

இ. தொ. கா. பொதுச் செயலாளர் எம். எஸ், செல்லச்சாமியை இ. தொ. கா. உடன் இணைந்து பணிகளை மேற்கொள்ள ஏதுவாக விட்டுக் கொடுத்து செயற்படுமாறு, ஜனாதிபதி விஜேதுங்கா கேட்டுக் கொண்டதாக தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை, சுமார் 45 நிமிட நேரம், செல்லச்சாமியுடன், விஜேதுங்கா பேசியபோதே இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் டபிள்யூ. பி வீ. திசாநாயக்காமீது கடந்த டிசம்பர் பாதம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயன்றதின் பேரில் பதவி நீக்கப்பட்ட, இ. தொ. கா. மாகாணசபை உறுப்பினர் திரு. எஸ். சதாசிவம் மீண்டும் உல்லாசப்பயண, கால்நடை தமிழ்க் கல்வி அமைச்சராக கடந்த சனியன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் தேர்தல் நடத்துவது அடிப்படை உரிமை மீறலாகும்

## நீதிமன்றம் செல்வது குறித்து கூட்டணி ஆராய்வு

(கொழும்பு)

தற்போதைய நிலையில், வன்னி, யாழ்ப்பாண மாவட்டங்களில் தேர்தல் நடத்த முனைவது, தேர்தல் அடிப்படை உரிமையை மீறுவதாக இருக்கின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த த. வி. கூ. தலைவர் திரு. சிவசிதம்பரம் வன்னி, யாழ்ப்பாண மாவட்டங்களில் மிகப் பெரும் பகுதிகளில் இன்னமும் அமைதி திரும்பவில்லை. அரசின் சட்டக் காவலர் கூட அங்கு சென்று கடமையாற்ற முடியாத நிலையே இருக்கின்றது

இந்த நிலையில் குறிப்பிட்ட ஒரு சில பகுதிகளில் மட்டும் முழு மாவட்டத்துக்கும் உரிய பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தலை அரசு எவ்வாறு நடத்த முடியும்?

அரசின் இந்த தன்னிச்சையான முடிவை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு இப்பொழுது ஆராய்ந்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

# தமிழ் கட்சிகளை இணைக்க பொ. ஐ. ஐ. மு. முயற்சி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி தமிழ்க் கட்சிகளை தனது அணியில் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு அக்கட்சிகளுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழர் விடுதலை கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய கட்சிகளுடன் பேச்சு நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒருவர் பலி; ஆயுதம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். அவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

கடந்த சனிக்கிழமை ஏறாவூர் ஐயங்கேணிப் பகுதியில் இம் சம்பவம் இடம்பெற்றது. சனிக்கிழமை இரவு காவல் கடமையில் இருந்த பொலிசார்மீது விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை நடத்தினர். கலாத்ஓயாவைச் சேர்ந்த நவரட்ண என்ற பொலிசாரே இத் தாக்குதலில் கொல்லப்பட்டவராவார்.

# தமிழரை கைது செய்ய இராணுவம் புதிய யுக்தி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்களைக் கைது செய்வதற்காக படையினர் புதிய யுக்திகளைக் கையாளுகின்றனர்.

மக்கள் கூடும் இடங்களில் வெடிப் பொருட்களை தாமே வைத்து விட்டு அதனைப் பயன்படுத்தி தமிழ் மக்களைக் கைது செய்கின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. சார்பில் போட்டியிட ஹேமா, சஜீத் மறுப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவியான ஹேமா பிரேமதாசாவும், மகன் சஜீத் பிரேமதாசாவும் தெரிவித்துள்ளனர்.

எமக்கு பாராளுமன்ற தேர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

(நமது நிருபர்)

தொழில் பாதிப்புற்ற மீனவர்களுக்கு நிறுத்தப்பட்ட மீனவர் உணவு முத்திரையை தொடர்ந்து வழங்கவும் மீனவர் பயிற்சிக் கல்லூரியை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இயங்க வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட்டதாக கூறி நிறுத்தப்பட்ட மீனவர் உணவு முத்திரையை தற்போதும் கடல் வலய தடைச் சட்டம் அமுலில் இருப்பதால் அவர்களது உணவு முத்திரை வழங்கப்படவேண்டியது அவ

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை 2-ம் ஆண்டில் அடிவைக்கிறது

நிதர்சனம் நிறுவனத்தினால் மாதம்தோறும் வெளியிடப்பட்டுவரும் ஒளிவீச்சு மே 94 மாத வீடியோ சஞ்சிகை வெளிவந்துவிட்டது. இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் மே மாத ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை புதுப்பொலிவுடன் பல்வேறு புதிய அம்சங்களை தாங்கி வெளிவந்துள்ளது.

இம்மாத ஒளிவீச்சில் மே நாள நிகழ்ச்சிகள், பொன் விளைத்த வேளாண் மன்னர்களை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கௌரவித்து பரிசில்கள் வழங்கியமை, தமிழீழ பொருண்மிய நிர்மாணத்தின் வளர்ச்சிப்படியாக தமிழீழத்தில் முதன் முதலாக திறந்து வைக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள்நாள் கருத்தரங்கு

சகல திணைக்களத் தலைவர்களுக்குமான கரும்புலிகள் நாள் கருத்தரங்கு தென்மராட்சிக் கோட்டத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்திலும் வடமராட்சிக் கோட்டத்தில் 2ஆம் திகதி

(4ஆம்பக்கம் பார்க்க)

# தமிழர் தமது பாதுகாவலர்களாக புலிகளையே கருதுகின்றனர்

(கொழும்பு)

தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தை தமது எதிரியாக கருதும் அதே வேளை புலிகளையே தமது பாதுகாவலர்களாக கருதுகின்றனர் என பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் யார் ஆதரவு பெற்றுள்ளார்கள்? என்ற கேள்விக்கு இலகுவான விடை விடுதலைப் புலிகள் என்பதாகும். யாழ். குடாநாட்டில் உள்ளோரில் பெரும்பாலானோர் புலிகளையே ஆதரிக்கிறார்கள். சுதந்திர நாடொன்றை பெறப் போரிடும் விடுதலைப் புலிகளுக்கு அங்குள்ள மக்கள் தமது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

புலிகள் அங்கு நிர்வாக அமைப்பைக் கட்டுப்படுத்துகின்றனர். அங்குள்ள கிறிஸ்தவ ஆலயங்களும் புலிகளை ஆதரிக்கின்றன. நான் அங்கு நேரில் சென்றபோது அதனை அவதானித்தேன்.

நான் அங்கிருந்தபோது இராணுவ முகாம்களிலிருந்து எறிகணைகள் ஏவப்படுவதையும் சாதாரண மக்கள் கொல்லப்படுவதையும் காயமடைவதையும் கண்டேன்.

அங்குள்ள மக்கள் இராணுவத்தை எதிரியாகவே கருதுகின்றனர். அதேவேளை புலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### ஈழக் குறுநாவல் போட்டி

தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் சுபமங்களா சஞ்சிகை இணைந்து வழங்கும், ஈழக் குறுநாவல் போட்டி முடிவு திகதி செப்டம்பர் 30 ஆம்திகதி குறு நா வல்களை தேசிய கலை இலக்கியப்பேரவை, 15|1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம். (8666)

### ஈழக்குறுநாவல் போட்டி

இப் போட்டியில் வெற்றி பெறும் குறுநாவல்கள் முதல் பத்தாயிரம், இரண்டாவது ஏழாயிரம், மூன்றாவதுமுறையே எட்டு நாவல்களுக்கும் ஆயிரம் ரூபா பணப்பரிசும் சுபமங்களாவில் பிரசுரிக்கப்படும் வாய்ப்பையும் பெறும் போட்டி விதிகள் யூன் சுபமங்களா இதழில் (8667)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும் உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சகலவிதமான மணிக்கூட்டு பற்றரிகளும், உதிரிப்பாகங்களும் விற்கப்படும். கஜன்ஸ் வாச்வேக்ஸ் '12 புகையிரத நிலைய வீதி' சுண்ணாகம் சந்திக்கருகாமையில். (8670)

### தவறிவிட்டது

எனது கைச்சங்கிலி(பவுண்) கந்தர்மடம் பலாலி றோட்டிற்கும் ஆஸ்பத்திரி சந்திக்கும் இடையில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8682)

### விதை தேவை

கல் தேக்கு (கத்தாப்பு) விதை தேவை. மில்க்வைற் (சி-9706)

### தேவை

தகரப்பந்தல்—கதிரை உடன்தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி- புஸ்பா களஞ்சியம் 707நெடுங்குளம் சந்தி, அரியாலையாழ்ப்பாணம். (8688)

## முகாம்களைச் சுற்றி தீ வைத்து எரிப்பு

(வடமராட்சி)

அச்சுவேலி ஒட்டகப்புலத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் சுற்றுப்புறப்பகுதிகளி ) உள்ள கட்டடங்கள், வீதிகளிலுள்ள பற்றைகள் என்பவற்றிற்கு தீ வைத்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச்சுவேலி வசாவிளான் வீதிகளில் உள்ள மக்கோணா பாடசாலைகளையண்டிய பகுதிகள் தீவைத்து எரிக்கப்பட்டு வருகின்றன. மாலை நேரங்களில் இப்பகுதிகள் தீ வைக்கப்பட்டு வருவதாகவும், வைக்கப்படும் தீ பெரும் சுவாலையுடன் எரிவதை அவதானிக்க முடிந்ததாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றன. (யோ)

## மொழிபெயர்ப்பாளர் தேவை

இலத்திரனியல் (E'ectronic), கணனி (Comput.r), பௌதிகவியல் (Physics) ஆகிய துறைகளில் ஆங்கிலத்தில் உள்ள புத்தகத்தை தமிழில் மொழி பெயர்ப்பு செய்வதற்கு நன்கு அனுபவமுள்ள மொழி பெயர்ப்பாளர் உடன் தேவை. சம்பளம் மாதம் 4000/-க்கு மேல் வழங்கப்படும். நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ உங்கள் தகைமைகளைக்குறித்து05-07-94க்கு முன் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு:- முழுநேரமாக, அல்லது பகுதிநேரமாக, வேலை செய்வதற்கு விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களிற்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி, (றெயில்வேகடவையருகாமை)

யாழ்ப்பாணம்.

(8675)

## 2-ம்ஆண்டு நினைவஞ்சலி



### கடற்புலி 2-ஆம் லெப்.காளிதாஸ்

கமலநாதன் விக்னேஸ்வரன்

தாயின்மடியில் 19-07-75 — தாயகமண்ணில் 30-06-92

கட்டைக்காட்டு இராணுவ முகாமிலிருந்து ஆனையிறவு நோக்கி முன்னேறிய இராணுவத்தினருடன் நேரடிச்சமரில் வீரச்சாவடைந்தார். இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளையும் நினைவு கூருகிறோம்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவை

## கையளிப்பு வைபவம்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (01-07-94) காலை 9.00 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்: திரு. க. ஜெயரத்தினம் (அதிபர்)


சிறப்பு நிகழ்ச்சி: நாடகம் (கல்லூரி மாணவர்கள்)

இன்னிசை கானம் (ராஜன்ஸ் இசைக்குழு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(8677) மாணவர் அவை 93/94

## ஈராண்டு நினைவலைகளில்...



### லெப். மணிமாறன் (சர்மா)

(வை. ரமணானந்த சர்மா)

| மண்பார்க்க... | மண்காக்க.. | மண்ணுக்காக... |
|---|---|---|
| 12.04.1972 | 19.08.1991 | 30.06.1992 |

ஆறடிப் பொன்னுடல் காற்றிலே கலந்தது
கட்டைக் காட்டிலோர் காவியம் சரிந்தது
ஆர்.பி.ஜி. நாயகன் பயணங்கள்
பாதியில் நின்றே போனது
'பலவேகய-2' வெட்டைச் சமரில்
மானத் தமிழன் மகுடம் தன்னில்
'வைர. சர்மா' வைரமாய்ப் பதிந்தான்
நீயில்லை இங்கு எம்முடன் - செய்தி
மெய்யா ரமணா? இல்லை இல்லை
மாவீரர் உமக்கு மரணமேது
எங்கள் காற்றில். எங்கள் கடலில்
எங்கள் மண்ணில், எங்கள் கொடியில்
இரண்டறக் கலந்து என்றும் எம்முடன்
நிரந்தரமாய் .....

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

உனைக் காலநதிக்

## நினைவு கூருகின்றோம்... 30-06-1994

1988-ம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறை-திக்கம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**இரேச்சப்பல்** (பரஞ்சோதி நச்சினாக்கினியர்-வதிரி கரவெட்டி - யாழ்)

1990-ம் ஆண்டு மன்னார்-முள்ளிக்குளம் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

**நிஸாம்** (பழனி மகேந்திரன்-கணேசபுரம், பரப்புக் கடந்தான் - மன்னார்)

**சொக்னேற்பேபி** (செல்லையா அகிலநாதன் - மாங்கொல்லை, காங்கேசன்துறை - யாழ்)

அம்பாறை - வீரமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 84 தமிழர்கள்.

மட்டு - உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட புதுநகரை சேர்ந்த தமிழிளைஞன்.

கிளிநொச்சியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991-ம் ஆண்டு திருமலை - மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் எமது முகாம் ஒன்றைச் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைக்க முயன்றபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.நிமால்** (பொன்னையா புலேந்திரன் - திருமலை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட வேப்பவெட்டுவானைச் சேர்ந்த விவசாயியான தமிழிளைஞன். ஐயங்கேணியைச் சேர்ந்த கூலித்தொழிலாளியான தமிழ்ப் பொதுமகன். பெரியபோரதீவுப் பகுதியில் கப்பம் கொடுக்க மறுத்தமையால் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்வர்த்தகர்.

திருமலை - தோப்பூர் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் சூடைக்குடா கூனித்தீவுப் பகுதிகளைச் சுற்றிவளைத்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1992 ம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ''பலவேகய-2''ன் போது 2-வது நாளாக புல்லாவெளியில் நடைபெற்ற சமரின்போது வீரச்சாவெய்திய,

**இசைவாணன்-கீதன்** (நடராஜா விமலராஜா - மத்தியமுகாம் - அம்பாறை)

**மேஜர் குமரன்** (துரைச்சாமி துரைசிங்கம் பன்குடாவெளி - மட்டு)

**லெப்.கலையரசன்-விஜயதீபன்-தீசன்** (கந்தப்பு சௌந்தரராஜன் - கறுப்பனை, மன்னம்பிட்டி, பொலநறுவ)

**மேஜர் விடுதலை-லம்பா** (இராசரட்ணம் ஆனந்தராசா - ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு)

**லெப்.மணிமாறன்-சர்மா** (வைத்தியநாத சர்மா ரமணானந்தசர்மா-மாவிட்டபுரம் - யாழ்)

**2-ம்லெப்.பிரணயன்-பிலிப்ஸ்** (அருளப்பு டிக்சொன் - மண்டைதீவு - யாழ்)

**2-ம்லெப்.கூத்தரசன்-குபேரன்** (பாலசுப்பிரமணியம் கிரிதரன் -காளிகோவிலடி, சங்கானை-யாழ்)

**2-ம்லெப்.சோலைவண்ணன்-விசு** (வீராசாமி சுதாகர் - கனகர்தோட்டம், காங்கேசன்துறை - யாழ்)

**2-ம லெப்.காளிதாஸ்** (கமலநாதன் விக்னேஸ்வரன் -2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை-யாழ்)

**2-ம்லெப்.வசந்தன்-வசி** (கந்தையா லோகேஸ்வரன் - சுழிபுரம் மத்தி-யாழ்)

குளம் சந்தி, அரியாலையாழ்ப்பாணம். (8688)

### மாவட்டமட்டத்தில் இரண்டாமிடம்

ஆனைக்கோட்டை றோ. க. த. க பாடசாலையின் மூன்றாம் பிரிவுக்கான வரலாற்று நாடகம், இசைநாடகம் இரண்டும் சண்டிலிப்பாய் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் தெற்கு வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் வரலாற்று நாடகம் முதலாம் இடத்தைப் பெற்று இறுதியில் யாழ். மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் வரலாற்று நாடகம் இரண்டாம் இடத்தையும்இசைநாடகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுப்பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளன.

### பரீட்சை கட்டணம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள க.பொ.த. (சாதர) பரீட்சைக்குத் தோற்றும்பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணமாக ஆறு பாடங்களுக்கு மேல் தோற்ற 50 ரூபாய் செலுத்த வேண்டும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு பாடத்திற்கு 15 ரூபாவும், இரண்டு பாடத்திற்கு 20 ரூபாவும், மூன்று பாடங்களிற்கு 25 ரூபாவும், நான்கு பாடங்களிற்கு 30 ரூபாவும், ஐந்து பாடங்களிற்கு 40 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும் என தெரியவருகின்றது.

### திறப்புவிழா

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு சமூகமேம்பாட்டுபிரிவினரால் நடாத்தப்படும் வின்சன் ஆஷா பாலர்பாடசாலை திறப்புவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

---

சாவடைந்த ஏனைய போராளிகளையும் நினைவு கூருகிறோம்.

2-ம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை. (8685) -தாய்

---

## 45-ம் நாள் நினைவலைகள்



**கந்தையா தெய்வேந்திரம்**

அன்னை மடியில் 01 - 11 - 1956    ஆண்டவன் அடியில் 17 - 05 - 1994

நண்பர்க்குதவிடவே நலியாது உழைத்திடுவாய்
நாடியவர்க்கெல்லாம் நலம் செய்து மகிழ்ந்திடுவாய்
கிளி அண்ணர் என்றுன்னை அன்புடன் அழைத்தோமே
கிட்டாத தொலைவிற்கு எமைப்பிரிந்து சென்றாயோ?
என்றும் எம் கண்கள் நனைந்திடும் உன் நினைவால்
என்றும் எம்கரங்கள் குவிந்திடும் உன்பிரார்த்தனைக்காய்
என்றும் உன்நாமம் மறவாமல் வாழ்ந்திடுவோம்
இன்றும் உனைநினைந்து பிரார்த்தனைகள் செய்திடுவோம்.

சுண்ணாகம். - நண்பர்கள்

(8665)

---

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

உனைக் காலநதிக் கரையில் மீள நினைக்கும்
பெற்றோர், உறவினர், நண்பர்கள்.

மாவிட்டபுரம். (8681)

---

## 2-ம் ஆண்டு நினைவில்



**மேஜர் லப்பா (விடுதலை)**
**(இராஜரட்ணம் ஆனந்தராஜா)**

ஜனனம் 69-04-19    வீரச்சாவு 92-06-30

ஆண்டிரண்டு சென்றதுவோ!
உள்ளமும் கலங்குதையா
உன் வித்துடலைக் காணாது
ஏங்கித் தவிக்கிறோமைய்யா
மாறாது மறையாது உன்புகழ்
கட்டைக்காட்டுச் சமரிலே
காவியம் படைத்து விட்டாய்
மீண்டும் நீ வருவாயோ என்றேஏங்குகின்றோம்.

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு. (8679) அன்பு அப்பா, அம்மா, அண்ணா, தங்கை.

---


2-ம்லெப்.வசந்தன்-வசி (கந்தையா லோகேஸ்வரன் - சுழிபுரம் மத்தி-யாழ்)
தமிழரசன் (குலசிங்கம் குணாளன்-நீதிமன்றவீதி, பருத்தித்துறை-யாழ்)
மறைச்செல்வன்-அமிர்தன் (குமாரவேல் சசிக்குமார் றெனிலோ இல 12, ரி. சீ, ஒழுங்கை, மானிப்பாய்-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(பி-9703)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:- 5- 03- 1967

விண்ணில்:- 30- 06- 1993

**செபஸ்தியாம்பிள்ளை யோய்வசிகுமார்**

அன்பான யோயே அருமையுள்ள எம்மகனே
ஆண்டொன்று ஆனாலும் உன்நினைவு மாறவில்லை
அன்பரது உள்ளங்களில் அணையா ஒளிச்சுடரே
எங்கள் மனதினிலே உந்தனுக்காய்வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
பெற்றார், சகோதரர், உறவினர்.

17/2, மருதடி றோட், யாழ்ப்பாணம். (8661)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## சிந்தனைக்கு..

தவறான எண்ணங்கள் மீது காதல் கொள்வதுதான் மனித இனத்தில் முட்டாள்களையும், ஆண்டிகளையும் உருவாக்குகின்றது.

- எட்வேர்ட் யங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 30-06-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# தொண்டமானும் தேர்தல் நிலைப்பாடும்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானின் அரசியல் நிலைப்பாடானது வழமைபோன்றே இம்முறையும் வெளிவந்துள்ளது. ''எமது பிரச்சினையைத் தீர்க்கவும், எமது கோரிக்கைகளுக்கு முகம் கொடுக்கவும் யார் முன்வருகின்றார்களோ அவர்களுடன் நாம் இணைந்து செயற்படவுள்ளோம்'' என்பதே அவரது நிலைப்பாடாகும். தனது இந்நிலைப்பாட்டிற்கு மக்கள் தொகையில் ஐந்து சதவீதத்தை மட்டுமே கொண்டு சிறுபான்மை இனமாக மலையகத் தமிழர் இருப்பதே காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

திரு தொண்டமான் முன்வைத்துள்ள நிபந்தனை/கோரிக்கை புதியதொன்றல்ல. காலத்திற்குக் காலம் இ. தொ. கா. புறக்கணிக்கப்படும் போதும், தேர்தல் காலங்களில் பேரம் பேசும் நிலை ஏற்பட்டபோதும் கூறி வந்தவையே. இவ்வருடத்தின் ஆரம்பத்தில் கூட டி. பி. விஜேதுங்காவுடன் முரண்பட்ட நிலையில் தொண்டமான் இதையே பேசினார்.

ஆனால், தொண்டமானின் இப்பேச்சானது கடந்த 17 வருட காலப் பேச்சுக்களை விட இன்று சற்று அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததொன்று என்றே கூற வேண்டும். ஏனெனில் கடந்த 17 வருட காலத்தில் இருந்த அரசியற் சூழ்நிலை இன்று இல்லை என்பதே இதற்குக் காரணமாகும். கடந்த 17 வருட காலப் பகுதியில் நடைபெற்ற அனைத்துத் தேர்தலிலும் இ.தொ.கா. ஐ. தே. கட்சியை ஆதரித்து நின்றதோடு, அதன் வெற்றிக்கும் கணிசமான பங்காற்றியிருந்தது. ஆனால், இன்றைய அரசியற் சூழ்நிலை ஐ. தே. கவின் வெற்றி வாய்ப்பை கேள்விக்குரியதாக்கியுள்ள நிலையிலேயே திரு. தொண்டமானின் நிலைப்பாடு வழமையானதாகிலும் சற்று ஆலோசனைக்குரியதாக மாறுகின்றது.

ஆனால், திரு. தொண்டமானின் பேரம் பேசும் அரசியலானது, அவர் கூறிக் கொள்வது போன்று

# எதிரணிகளை சேர்க்க பொது ஜ. ஐ. மு. பேச்சு

(கொழும்பு)

ஐ. தே. கவிற்கு எதிரான கட்சிகளை தனது கூட்டணியில் சேர்ப்பதற்காக பொது ஜன ஐக்கிய முன்னணி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்கென மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, நவசமசமாஜக்கட்சியின் வாசுதேவ நாணயக்கார, ஐ. ஐ. தே. மு. யின் சிறிமானி அத்துலத் முதலி ஆகியோருடன் பேச்சுகள் நடைபெறுவதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் கூறியுள்ளார்.

இதேசமயம் முஸ்லிம் காங்கிரசுடனும் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

# ஒபேவன்ச ராஜினாமா கட்சிக்கு நன்மையே

### ஐ. தே. க. பொதுச் செயலர்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் காலிங்க ஒபேவன்ச தனது கட்சி உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தது அவர் கட்சிக்கு செய்த பெரிய சேவையாகக் கருதப்படும் என ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கட்சியின் கொள்கையை ஏற்றும், கட்சியில் தலைமையின் சட்டஙளயை ஏற்றும் நடக்க தவறுபவர்கள் கட்சியில் இருப்பதை விட இவர்கள் வெளியேறுவதே சாலச் சிறந்தது எனத் தெரிவித்துள்ளார்.

# பதவியை விட்டு விலக 80 லட்சம் பேரம்

### - தேசியப் பட்டியல் எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியை தான் ராஜினாமா செய்தால் தனக்கு பத்து லட்சம் ரூபா முதல் எண்பது லட்சம் ரூபா வரை பணம் தர பேரம் பேசப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகவிருந்த காலிங்க ஒபேவன்ச தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்ட பின் அவர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

நான் எடுப்பார் கைப்பிள்ளையாக செயற்படக் கூடியவனல்ல. எனவே எனக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றதல்ல என மேலும் அவர் கூறினார்.

# புலனாய்வுத்துறை கடத்தலின் பின்னணியில்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் தொடர்ந்தும் மர்மமான முறையில் கடத்தப்படும் சம்பவங்களுக்கு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினர் பின்னணியில் இருப்பதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இந்த மர்மக் கடத்தல்களுக்கு இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த பிரிகேடியர் பலகல்ல தலைமை தாங்குவதாகவும், இக் குழுவில் தமிழ்த் தேசவிரோத குழுக்களும் அங்கம் வகிப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இலக்கமில்லாத வாகனங்களில் சிவில் உடையில் வந்து தமிழர்கள் கடத்திச் செல்லப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம் பெறுவது தெரிந்ததே.

# இலவச நிவாரணத்திற்கு பாவனைக்குதவாப் பொருள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் விநியோகிக்கப் படுகின்றன என தெரிவிக்கப் படுகின்றது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் பொருள்களில் சிலவே இவ்வாறுபாவனைக்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் அரிசி, வெள்ளைப் பூடு என்பன விநியோகிக்கப்படுவதாகவும் இவற்றை கட்டாயம் பெற வேண்டும் என கூட்டுறவு சங்க கிளை பணிப்பதாகவும் தெரியவருகின்றது.

இது குறித்து மேற்படி கூட்டுறவு சங்க தலைமை அலுவலகத்தில் பாவனையாளர் முறையிட்டபோது தமக்கு இது குறித்து ஒன்றும் செய்ய முடியாது என்றும் புனர்வாழ்வுப் பிரிவினர் தரும் பொருள்களை முழுமையாக விநியோகிக்குமாறு புனர்வாழ்வுப் பகுதியினர் பணித்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

## பதனிட்ட பால் விநியோகம்

வன்னி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கைத்தொழில் பகுதியினர் பாலைப் பதனிட்டு யாழ்நகரில் விநியோகம் செய்து வருகின்றனர்.

கூடிய பால் உற்பத்தி செய்யப்படும் வன்னியிலிருந்து பால் பதனிடப்பட்டு, தொற்று நீக்கப்பட்டு, போத்தலில் அடைத்து இங்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பால் பதனிட்ட முயற்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையின் முதற் கட்டமாக யாழ் நகரில் வானவில் குளிர்பான நிலையத்திலேயே இதன் விற்பனை தற்போது இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வலுப்படுத்தல்

நீர்வளங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கோப்பாய், நீர்வேலி அணைக்கட்டு வலுப்படுத்தும் வேலைகளை தேசநிர்மாணிகள் ஆரம்பித்துள்ளனர்.

நீர்ப்பாசனதிணைக்களத்தின் அனுசரணையுடன்மேற்கொள்ளப்படும் இவ்வாறான வேலைகள் மேலும் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆயுதக் குழுக்கள் குறித்து தமிழ்க்கட்சிகள் அச்சம்

எதிர் வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு, வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் மக்களிடையே தத்தமக்கு ஆதரவு தேடும் முயற்சிகளில் கொழும்பு தமிழ்க் குழுக்கள் ஈடுபாடு காட்டி வருகின்றன.

குழுக்களிடையே, நம்பிக்கையின்மை நிலவுவதால், தனித்தனியாக இந்த ஆதரவு தேடலில் இக்குழுக்கள் இறங்கியிருப்பதாக தெரிய வருகிறது. தீவுப்பகுதிகளில், இயங்கும் ஆயுதக் குழுக்களினால் தேர்தல் காலத்தில் தலையீடுகள் ஏற்படலாமெனவும் சில தமிழ்க்கட்சிகள் அச்சம் தெரிவித்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. மாவை சேனாதிராஜா நயினாதீவிலுள்ள மக்களைச் சந்தித்து ஆதரவு தரும்படி கேட்டுக் கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்ட மொத்த வாக்காளர்களான 596, 000 பேரில், ஏழாயிரத்துக்கும் குறைவானோரே இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் சிக்குண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டப் போட்டி

திருமலை நட்சத்திரங்களின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று மாலை யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பீட மைதானத்தில் ஆரம்பமாகிறது. மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ் வி. கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய வி. கழகமும். 3. மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் வி. கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு அம்பாள் வி. கழகமும் 4 மணிக்கு ஆரம்பமாகும் மூன்றாவது போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி வி. கழகமும் விளையாடவுள்ளன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சிநிரல்

**1994 - 06 - 30 -**
**வியாழன் இரவு**

08-01 - கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி ''உரிமைப்போர் வென்றவர்கள்''
08.20 - உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயப்பீட பயிரியல் துறைத்தலைவர் எஸ். இராசதுரை அவர்களுடனான செவ்வியின் முதற்பகுதி
08 30 - செய்திகள்
08.40 - ஏட்டிலிருந்து - நங்கூரம் என்ற சஞ்சிகையிலிருந்து ''உலகை உலுக்கும் பூகம்பம்' என்னும் கட்டுரையின் சில பகுதிகள்
08.50 - மலரும் மொட்டுக்கள்

**1994 - 07 - 01 -**
**வெள்ளி காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - விடுதலை கானங்கள்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

துறையைச் சேர்ந்த பிரிகேடி பெறுவது தெரிந்ததே. தக்கது.

ஆனால், திரு. தொண்டமானின் பேரம் பேசும் அரசியலானது, அவர் கூறிக் கொள்வது போன்று மலையகத் தமிழ்மக்களின் உரிமையுடனோ அன்றி நலனுடனோ தொடர்புபட்டது என்று கொள்வதற்கு காரணம் எதுவும் இல்லை. ஏனெனில் கடந்த காலங்களிலும் இவ்வாறான பேரங்கள்/நிபந்தனைகளுடன்கூடிய அறிவிப்புக்கள் வெளிவந்தன. ஆயினும், அதில் திரு தொண்டமானும் அவருடன் கூடியிருந்தவர்களும் பயன்பெற்றார்களே ஒழிய மலையக மக்கள் நன்மை ஏதும் பெற்றதாகத் தெரியவில்லை.

திரு. தொண்டமான் தான் கூறிக்கொள்வது போன்று மலையக மக்களின் நன்மையையே மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுபவராக இருப்பாரேயானால் கடந்த 17 வருடம் ஐ. தே. கட்சியின் அரசாங்கத்துடன் இருந்து விட்டு இன்று மலையக மக்களின் உரிமை பற்றிப் பேசியிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஏற்கனவே மலையக மக்களின் பிரச்சினை தீர்த்து வைத்திருக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர் பதவி விலகியிருக்க வேண்டும்.

ஆனால், 17 வருடங்களாக அவரால் தீர்க்க முடியாத பிரச்சினைக்கு இம்முறை இட்டும் தேர்தல் வாக்குறுதி மூலம் தீர்வு கண்டு விடலாம் எனக் கூறுவதும், எதிர்பார்ப்பதும் மக்களை ஏமாற்றும் செயலே ஒழிய வேறொன்றும் இல்லை. இது தொண்டமானுக்கும் தெரியாததல்ல. ஆனால், அவருக்கு இவ்வாறான கோரிக்கையும், பேரம் பேசுதலும் இன்று அவசிய தேவையானதாக உள்ளது.

ஏனெனில், தமது தலைமை குறித்து மலையக மக்களை ஒரு மாயையில் வைத்திருக்க வேண்டிய தேவை தொண்டமானுக்கு அவசியமாகும். இதற்காக அரசியற் பேரங்களும், நடவடிக்கைகளும் மலையக மக்களின் உரிமைக்கெனவும், நன்மைக்கெனவும் என்ற நம்பிக்கையை அவர் ஏற்படுத்த வேண்டிய அவசியம் அவருக்குண்டு. அவ்வாறு ஏற்படுத்தும் பட்சத்திலேயே அவர் தனது தலைமையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இந்தவகையில், திரு. தொண்டமான் மலையக மக்களை வைத்து நடத்தும் அரசியல் சதுரங்கமானது மலையக மக்களின் உரிமைக்கானதோ அன்றி நன்மைக்கானதோ அல்ல. அவரது அரசியற் பேரங்களுக்கு வலுச் சேர்க்கும் நடவடிக்கையே ஒழிய வேறு இல்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் தொண்டமான் எந்த அரசியல் நிலைப்பாட்டையும் எடுக்கலாம். இ. தொ. கா. எவருடனும் கூட்டுச் சேர்ந்தும் போட்டியிடலாம், தனித்தும் போட்டியிடலாம். ஆனால், அவை என்றும் தொண்டமானின் நலனுக்கு விரோதமானவையாக இருக்க மாட்டாது என்பது மட்டும்தெளிவு. ஆனால் மலையக மக்களுக்கு விரோதமானவையாக இருந்தால் அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

# வல்லரசு என்பதைக் காட்டவே பிரான்ஸ் படைகளை அனுப்பியது

## ருவாண்டா தலையீடு குறித்து பிரெஞ் பிரதமர்

(பாரிஸ்)

பிரான்ஸ் இப்பிராந்தியத்தில் ஒரு வல்லரசு என்பதை நிரூபிக்கவே ருவாண்டாவினுள் நடைபெறும் படுகொலைகளை நிறுத்த தனது துருப்புகளை அனுப்பியதாக பிரெஞ் பிரதமர் எடுவா பரதுவா தெரிவித்துள்ளார்.

பிரெஞ் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் மத்திய ஆபிரிக்க நாடுகளுடன் பிரான்ஸ் பாரம்பரிய தொடர்புகளைக் கொண்ட ஒரு நாடு என்றும் சுட்டிக் காட்டினார். ருவாண்டா சென்றபிரெஞ்படைகள் அநேகமாக ஜூலையில் தமது பணிகளை முடித்து விடும் எனவும் கூறினார்.

இதேசமயம் ருவாண்டாவின் மேற்கு பகுதியில் நிலைகொண்டுள்ள பிரெஞ் படைகளின் தளபதி தமது படைகள் படுகொலைகளை நிறுத்தி விட்டதன் மூலம் தனது முதல் இலக்கை பூர்த்தி செய்துவிட்டதாக கூறினார். ருவாண்டா அரச படைகளுக்கு முன்னர் பிரான்ஸ் அரசு உதவி அளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# ருவாண்டாவில் மீண்டும் கடும் மோதல் ஆரம்பம்

(கிகாலி)

ருவாண்டாவின் தலைநகரான கிகாலியில் சண்டைகள் மீண்டும் ஏற்பட்டுள்ளன. இதனால் அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வைத்தியசாலைகளிலிருந்து காயமடைந்தவர்களை மீட்பதற்கு செஞ்சிலுவைச்சங்கத்தால் முடியாத நிலை ஏர்பட்டுள்ளது.

ருவாண்டா நேச பக்த முன்னணியின் துருப்புகள் பீரங்கி மற்றும் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் மூலமாக அரசாங்க படைகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். சண்டையின் காரணமாக சிக்கியுள்ள சுமார் 30,000 க்கும் மேற்பட்ட பொது மக்களை மீட்கும் திட்டங்களை ஐ. நா. படை ரத்துச் செய்துள்ளது.

# ஹெய்ட்டி அகதிகள் அமெரிக்காவிற்கு படையெடுப்பு

## திட்டமிட்ட சதி என இராணுவ அரசு குற்றச்சாட்டு

(மியாமி)

ஹெய்ட்டியிலிருந்து அகதிகளாக படகுகளில் அமெரிக்கா நோக்கி வந்து கொண்டிருந்த 1000க்கும் மேற்பட்ட ஹெய்ட்டி மக்களை அமெரிக்க கடலோரக்காவற்படை மீட்டுள்ளது. இம்மாதத்தில் மட்டும் இவ்வாறு 2800க்கும் அதிகமான ஹெய்ட்டி அகதிகள் இவ்வாறு நடுக்கடலில் அமெரிக்க கடலோரப்படையால் மீட்கப்பட்டுள்ளனர்.

1993 இல் முழுவதும் 2500 அகதிகள் மட்டுமே அமெரிக்கா வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் இத்தொகை முதல் 6 மாதங்களிலேயே எட்டிவிட்டதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். ஹெய்ட்டி இராணுவ அரசு மீதான தடைகள் உலகநாடுகளால் விதிக்கப்பட்டதையடுத்து இவ்வாறு அகதிகள் அதிகமாக வெளியேறுகின்றனர். முன்னர் ஹெய்ட்டிய அகதிகள் அமெரிக்காவிற்கு வருவதற்கு ஜனாதிபதி புஷ் கடும் கட்டுப்பாடுகள் விதித்திருந்ததும் தற்போது ஜனாதிபதி கிளின்டன் இக்கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா ஹெய்ட்டிய அகதிகள் வருவதை ஊக்குவிப்பது ஹெய்ட்டியினுள் அது இராணுவ தலையீடு செய்வதற்கான ஒரு திட்டமே என ஹெய்ட்டி இராணுவ அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

# மூன்று ஆட்டங்கள் ட்ரோவில் முடிவடைந்தன

(வாஷிங்டன்)

உலகக்கோப்பை உதைபந்தாட்டப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில்ரஷ்யா, கமரூன் அணியை 6-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. இத்தாலி-மெக்சிக்கோ இடையிலான போட்டி இரண்டு அணிகளும் தலா ஒரு கோல் போட்டதில் ட்ரோவில் முடிந்தது.

அயர்லாந்து - நோர்வே அணிகளிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல் ஏதும் போடாத நிலையில் ஆட்டம் ட்ரோவில் முடிவடைந்தது பிரேசிலுக்கும் சுவீடனுக்கும் இடையில் நடந்த பரபரப்பானபோட்டியில் இரு அணிகளும் தலாஒரு கோல் போட்டதால் ஆட்டம் ட்ரோவில் முடிவடைந்தது.

இதன் மூலம் மெக்ஸிக்கோ அயர்லாந்து, பிரேசில், சுவீடன் இத்தாலி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும்இரண்டாம் சுற்றுக்கு தெரிவாகியுள்ளன.

## 25 பேர் பலி

திருமணத்திற்காக சென்ற ஒரு குழுவினர் மீது உகண்டா இராணுவ சிப்பாய் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 பேர் கொல்லப்பட்டனர். குழுவில் சென்ற பெண்களை தம்முடன் நடனமாட வருமாறு இச்சிப்பாய் அழைத்த போதிலும் அதை அவர்கள் மறுக்கவே ஆத்திரமடைந்த சிப்பாய் இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

உலகக் கோப்பை உதைபந்தாட்டம்

# ஜேர்மன், ஸ்பெயின் இரண்டாம் சுற்றுக்கு தகுதி

## சிறப்பாக ஆடிய கொரியா தகுதியிழந்தது

(வாஷிங்டன்)

உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஞாயிறன்று நடைபெற்ற ஆட்டங்களில் ஜேர்மனி தென் கொரியாவை 3-2க்கு என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. மற்றுமோர் ஆட்டத்தில் ஸ்பெயின் பொலிவியாவை 3-1க்கு என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. கடந்த முறை சாம்பியனான ஜேர்மனியை இப்போட்டியில் தென் கொரியா வியக்கத்தக்க வகையில் எதிர்த்துஆடியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாட்டங்கள் மூலம் ஜேர்மனியும் ஸ்பெயினும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இவ்வாட்டங்களில் ஜேர்மன்-தென்கொரிய அணிகளிடையிலான போட்டி முதற் சுற்றுப் போட்டிகளில் குறிப்பிடத்தக்கதோர் மோதலாக இருந்தது.

கடந்த முறை உலகசாம்பியனான ஜேர்மனி தென் கொரியாவுடனான இப்போட்டியில்இறுதிவேளையில்திணறவேண்டியிருந்தது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...நூலகம்.

# என்னை வெளியேற்றிய சந்திரிகா தாயாரை வெளியேற்ற முயல்கிறார்

## உயர் கல்வி அமைச்சர் அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு இடமில்லை யெனக் கூறிய சந்திரிகா பண்டாரநாயக்கா தென் மாகாண சபைத் தேர்தலின் பின் கொழும்பிலுள்ள வர்த்தகர்களை ஒன்றுகூட்டி திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொள்வதாக கூறி வருகின்றார். அவர் இவ்வாறு கூறுவது மக்கள் மீது கொண்ட அன்பினால் அல்ல தேர்தலுக்குத் தேவையான பணத்தை வர்த்தகரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கேயாகும் என அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார். இங்கிரிய நகரில் நடைபெற்ற ஐ.தே.க. பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று சுதந்திரக் கட்சியிடம் செலவழிக்கப் பணமில்லை. 1971-ல் பிரச்சினை ஏற்படுத்திய குழுவினருடன் சேர்ந்து சதி செய்து மூதலாவதாககட்சியிலிருந்து என்னை விரட்டிவிட்டு அதையே தாயாருக்கும் செய்ய சந்திரிகா முயலுகின்றார்.

இளைஞர் நிர்வாகம் இளைஞரிடமே பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார். தாயாரும் வேண்டாம் என்பதே இதன் அர்த்தமாகும். இளைஞர் பற்றிப் பேசுவதற்கு அவருக்கு என்ன அருகதையிருக்கிறது. அவருக்கே ஐம்பது வயதாகிவிட்டது. அவர் நினைக்கும் அளவிற்கு அவர் யுவதி அல்ல.

ஐ.தே.க வினால் வழங்கப்படும் சலுகைகள் தேர்தல் தந்திரம் என எதிரணியினர் கூறுகின்றனர். மக்களுக்கு தாராளமாக உண்ண, உடுக்க கொடுப்பதைக் கூட சந்திரிகா விரும்பவில்லைபோலும் என அவர் மேலும் அங்கு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியில் ஏற்பட்ட விரக்தியினாலேயே நான் ஐ.தே.கவில் இணைந்தேன். ஜனாதிபதி விஜேதுங்காவின் வேண்டுகோளில் மக்களுக்கு சேவையாற்றஇணைந்த நான் மீண்டும் சுதந்திரக் கட்சியில் ஒருபோதும் சேரமாட்டேன் எனவும் அவர் கூறினார்.

## வீரவணக்க கூட்டம்

தீவகக் கோட்டத்தில் 6-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றிரவு 8 00 மணிக்கு கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் நடைபெறவுள்ளது.

## கலிபர் தாக்குதல்

(நல்லூர்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்று முன்தினம் இரவு பலதடவைகள் கடற்கரையோரங்களை நோக்கி கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டது.

நேற்று காலை சிறிலங்காவின் உலங்கு வானூர்தியும் கடற்கரைப் பகுதிகளை நோக்கிப் பலதடவை வட்டமிட்டுச் சென்றது. கடந்த சில தினங்களாக யாழ். குடாநாட்டில் சிறிலங்காவின் விமானங்கள் பலதடவைகள் பறந்து திரிந்த வண்ணமாக உள்ளன. (17)

## போட்டிப் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

திணைக்கள பணியாளர்களிலிருந்து மாணவ தாதியரை தேர்வு செய்வதற்கான போட்டிப்பரீட்சை முன்னர் திட்டமிட்டவாறு வரும் 3ஆந் திகதி நடைபெற மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேர்வுக்கான போட்டிப் பரீட்சை பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப் படுமென சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (சி)

## ..2-ம நாள் நினைவஞ்சலியும் கிருகக் கிருத்தியமும்

### ஆவரங்கால், திருமதி கஜமுகதேவி கனகசபை

ஆவரங்கால், திருமதி கஜமுகதேவி கனகசபை அவர்களின் அந்தியேட்டி 29-6-94ந் திகதி ஊறணியில் சிறப்பாக நடந்தது. இன்று 30-6-94 வியாழக் கிழமை அன்னாரது வீட்டில் வீட்டுக் கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். அதில் உற்றார், உறவினர், நண்பர் ஆகிய எல்லோரையும் கலந்து கொ..ளும் வண்ணம் மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்னாரது மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் எங்களுக்குப் பலவகையிலும் உதவியவர்களனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்

(8686) த. கனகசபையும், மக்கள ப்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## கரும்புலிகள் நினைவாக மாவீரர் கட்டுரைப் போட்டி

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மாவீரர் பணிமனையினால் நடத்தப்பட்ட ஜூலை - 5 கரும்புலிகள் நாளையொட்டிய போராளிகள் மட்டத்திலான மாவீரர் வரலாற்றுக் கட்டுரைப் போட்டியின் பிரிவு நிலைசார் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதல் இடத்தை கலாஜினியும். இரண்டாம் இடத்தை ராஜாவும் மூன்றாம் இடத்தை ஜெயந்தியும் பெற்றனர். ஐந்து ஆறுதல் பரிசுகளை மிருணா, வினோத், சுரேஸ், பரணிரூபன், பிருந்தவன் ஆகியோர் பெற்றுள்ளனர். அதிகப்படியான கட்டுரைகளை எழுதிய தமிழ்ச்செல்வன் சிறப்புப் பரிசினைப் பெற்றுள்ளார்.

# இலவச சீருடைத் துணி அளவு பற்றி அறிவிப்பு

பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் சீருடையின் அளவு தொடர்பான விபரங்கள் கல்வி கலாசார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆண்டு 1தொடக்கம் ஆண்டு 5வரை கல்வி பயிலும் கனிஷ்ட ஆண் மாணவர்களுக்கு 1.15 மீற்றர் சேட் துணியும், 0.68 மீற்றர்

ஆண்டு 9வரை பயிலும் இடைநிலை ஆண்களுக்கு 1.37 மீற்றர் சேட்துணியும் 0.91 மீற்றர் காற்சட்டைத் துணியும் வெள்ளை அல்லது நீலநிறத்தில் வழங்கப்படும். இடைநிலைப் பெண்களுக்கு 2.28 மீற்றர் சீருடைத் துணி வழங்கப்படும்.

ஆண்டு 10தொடக்கம் ஆண்டு 13 வரை பயிலும் சிரேஷ்ட ஆண் மாணவர்களுக்கு 1.75மீற்றர் சேட்துணி

# கருத்தொருமித்த காதலர் வாழ்வையும் உருக்குலைப்பது சீதன மோகமே

## கரும்புலிகள் நாள் கருத்தரங்குகள்

கரும்புலிகள் நினைவுநாளை யொட்டி மாவட்ட கோட்ட ரீதியாக நடைபெற்று வரும் கருத்தரங்குகளில் இன்று பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் நடைபெறும். அதிபர்கள், ஆசிரியர்கள் க.பொ.த. உயர்தர, சாதாரணதர மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நண்பகல் ஒரு மணிக்கு வேலணை மத்திய மகா வித்தியாலயத்திலும், உடுவில் மகளிர் கல்லூரியிலும், மகாஜன கல்லூரியிலும், யூனியன் கல்லூரியிலும் நடைபெறும்.

### கரும்புலி

சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் வலிகாம கோட்டத்தில் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உரும்பராய் அன்னைபூபதி மண்டபத்திலும் தீவகம், வலிகாமம் கோட்டத்தில் அதே தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திலும் இடம்பெறுமென தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### ஒளிவீச்சு

பட்ட தமிழீழ வைப்பகம், மற்றும் 'போரும் சமாதானமும்' எனும் விவரணம் என்பவற்றுடன் கலை நிகழ்ச்சிகள், குறும்படம் என்பன இடம்பெறுகின்றன.

இவ் வீடியோ சஞ்சிகை இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 6 00மணிக்கு அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

### மீனவர்

சியமானது எனவும் அரச அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது திருகோணமலைக்கு மாற்றப்பட்டுள்ள மீனவர் பயிற்சிக் கல்லூரியையும் தொடர்ந்து இங்கு இயங்க வைப்பதன் மூலம் மீனவர்கள் பலர் பயிற்றப்படுவார்கள் எனவும் ஆதலால் இப் பயிற்சிக் கல்லூரியையும் தொடர்ந்து இங்கு இயங்க

## மேலும் சில மாவீரர் படங்கள் வெளிவந்துள்ளன

★ லெப். கேணல் சந்திரன். இராமலிங்கம் முத்து... கம், கிளிநொச்சி. ★ லெப் கேணல் இராசன் / றோமி... நவம்பர், சோமசுந்தரம் சற்குணம், மாதகல். ★ லெ... கேணல் நரேஷ் / நாயகன், சிங்கராசா அருள்நாயகம், பு... குடியிருப்பு. முல்லைத்தீவு ★ லெப்: கேணல் வேணு பிர... சிஸ் றொபேட்சேவியர், மன்னார். ★லெப். கேணல் சுப... வி.ாசித்தம்பி சுந்தரலிங்கம், மன்னார். ★ லெப். கேண... அருணன் / சூட், நவரட்ணம் விக்கினராசன், நல்லூர். ★ லெப். கேணல்நவநீதன், தில்லையம்பலம் திருலோகநாத... வவுனியா. ★ லெப். கேணல் குணா, சுந்தரம் விஜயராசா... சாவகச்சேரி.

இம்மாவீரர்களின் உருவப்படங்களை சிறு அன்பளிப்பு... செலுத்துவதன் மூலமாக கொக்குவில் பொற்பதி வீதி, த... மீழ மாவீரர் பணிமனையில் மட்டும் 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரையான நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம், என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

★ 14 கரும்புலிகள் படங்களும் தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

### யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

### விசேட பொதுக் கூட்டம்

இன்று 30-06-94 வியாழக்கிழமை பிற்பக... 3 00 மணிக்கு யாழ். மாநகர சபை எல்லைக்கு... பட்ட சகல வணிகப் பெருமக்களுக்கும் ஓர் வி... பொதுக் கூட்டம் யாழ். வணிகர் கழகப் பணிம... யில் நடைபெறவிருப்பதால் சகல வணிகப் பெரும... களும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொ... மாறு கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றே... தமிழீழ அரசியல் துறையினரும் கலந்துகொள்வார்...

நன்றி, வணக்கம்.

பொதுச் செயலா...

யாழ். வணிகர் கழக...

(சி-9707)

## முக்கிய கலந்துரையாட...

### நல்லூர் வணிகர் கழகம்

யூலை 5 கரும்புலிகள் தினத்துக்கான ஏற்பா... பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்று 30-... வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு கல்வி... காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் இடம்பெற... ளது. நல்லூர் பிரதேசத்தில் உள்ள அனைத்து வ... தகர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமா... அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

- நல்லூர் வணிகர் கழக...

[சி-9704]



## அமரர் நடராஜா வரதராஜா
### (வரதன்)

தாயின் மடியில் 1959 - 12 - 22     தாயக மண்ணில் 1991 - 07 -03

**திதி: 1994-06-30 வியாழக்கிழமை**

வரதா.
எங்களை விட்டு நீ மறைந்து ஆண்டுகள் மூன்று
ஓடி மறைந்ததுவோ
எங்கள் கண் ஒளியும் மங்கி மறைந்ததுவோ
நிலவு வரும் நேரமெல்லாம் நீ வருவாயென
நாமெண்ணி
நிலா மறையும் வரை காத்திருந்தோம்
நீ சென்ற பாதையெங்கும் உன் பாதசுவடு
தேடுகின்றோம்.
நீ இருந்த இடம் இன்று பாலைவனமானதேன்
தென்றலும் பெரு நெருப்பாக மாறி எரிப்பதேன்
இன்று நீ எங்கு சங்கமமானாயோ
ஒவ்வொரு விடியலின் போதும் உனக்காக
காத்திருக்கின்றோம்.
உன் சங்கமம் நிச்சயம் அந்நிய மண்ணில் அல்ல
தாயக மண்ணின் தாயின் மடியிலேயே
ஆண்டுகள் மூன்றென்ன முந்நூறு ஆனாலும்
தமிழ் நெஞ்சங்களை விட்டகலா உன் நினைவு.
ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்
றோம்.

இலக்குமி வாசா
சாமியன் அரசடி
கரவெட்டி

குடும்பத்தினரும்
நண்பர்களும்
(இ)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தொடர்பான விபரங்கள் கல்வி கலாசார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆண்டு 1தொடக்கம் ஆண்டு 5வரை கல்வி பயிலும் கனிஷ்ட ஆண் மாணவர்களுக்கு 1. 15 மீற்றர் சேட் துணியும், 0. 68 மீற்றர் காற்சட்டைத் துணியும் வெள்ளை அல்லது நீலநிறத்தில் வழங்கப்படும். கனிஷ்ட பெண்களுக்கு 1. 82மீற்றர் சீருடைத் துணி வழங்கப்படும் ஆண்டு 6 தொடக்கம் துணியும் வெள்ளை அல்லது நீலநிறத்தில் வழங்கப்படும். இடைநிலைப் பெண்களுக்கு 2. 28 மீற்றர் சீருடைத் துணி வழங்கப்படும்.

ஆண்டு 10தொடக்கம் ஆண்டு 13 வரை பயிலும் சிரேஷ்ட ஆண் மாணவர்களுக்கு 1. 75மீற்றர் சேட்துணியும் 1. 82 மீற்றர் காற்சட்டைத் துணியும் வழங்கப்படும் இது வெள்ளை அல்லது நீல நிறத்தில் வழங்கப்படும் சிரேஷ்ட வகுப்பில் கல்வி பயிலும் பெண்களுக்கு 2.75மீற்றர் சீருடைத் துணி வழங்கப்படும்.

14 வயதுவரை உள்ள துறவு மாணவர்களுக்கு காவித்துணி 6. 40 மீற்றரும் 14 வயதுக்கு மேல் உள்ள துறவு மாணவர்களுக்கு 9.14 மீற்றர் காவித்துணியும் வழங்கப்படும். (17)

## இ. தொ. கா.

மீள பதவியேற்றது குறித்து கருத்து தெரிவித்த திரு, சதாசிவம், பொதுத் தேர்தலின் பின்னரே நான் இந்தப் பதவி மாற்றத்தை விரும்பினேன். எம்மோடு ஒத்துழைத்த மக்களினதும், தலைவர் தொண்டமானினதும் வேண்டுகோளின் பேரிலேயே மீண்டும் அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்க முடிவு செய்தேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய மாகாண சபையில் இ,தொ,கா. வுக்கு எதிராக இயங்கிய எட்டு உறுப்பினர்களின் நிலை பற்றி குறிப்பிட்டபோது, எமது தேசிய சபை எடுத்த முடிவின்படி முதலில் இந்த எட்டுப் பேரும் தமது பதவிகளை விட்டு விலக வேண்டும் அதன் பின்னர் தம்மை மீண்டும் சேர்த்துக்கொள்ளுமாறு விண்ணப்பித்தால், அவர்களின் விண்ணப்பத்தை மீண்டும் பரிசீலனை செய்வோம் என்றார்.


யாழ். ஸ்ரீதரில்
STEVFNSPIELBERG
இயக்கிய
JURASSIC
PARK
(அறிவியல் சார்ந்த
திகில் படம்)
தினசரி 4, 6
சனி, ஞாயிறு 10.30,
4.6 மணி
(சி-9872)


## வல்வெட்டித்துறை

விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் சரமாரியாகச் சுட்டதில் ஆதிகோவிலடியைச் சேர்ந்த சுவாமிநாதன் சாந்தசிவம் (வயது 23) என்பவர் கையில் படுகாயமடைந்தார்.

இவர் அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இவருடன் கட்டுமரத்தில் சென்ற பரமேஸ் என்பவர் காயங்கள் இன்றி தப்பிக்கொண்டார்.

கடற்படையினர் தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதலையும், கலிபர் தாக்குதலையும் தொடர்ந்து மேற்கொண்டனர். விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலையடுத்து கடற்படையினர் ஓடி மறைந்தனர். (யோ)

## தமிழுரை

இதே போன்று அண்மையில் மட்டக்களப்பு நகர்ப்புறத்திலுள்ள பஸ் நிலையமொன்றில் வெடி குண்டினை இராணுவத்தினரே வைத்துவிட்டுசோதனைசெய்வதென்ற போர்வையில் பலரைக் கைது செய்துள்ளனர். இதன் பின்னர் அயலிலிருந்த வீடுகளும் கடைகளும் சோதனையிடப்பட்டும் வேறு சில தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என தெரியவருகிறது.

தற்போது திருகோணமலைக்கு மாற்றப்பட்டுள்ள மீனவர் பயிற்சிக் கல்லூரியையும் தொடர்ந்து இங்கு இயங்க வைப்பதன் மூலம் மீனவர்கள் பலர் பயிற்றப்படுவார்கள் எனவும் ஆதலால் இப் பயிற்சிக் கல்லூரியையும் தொடர்ந்து இங்கு இயங்க ஆவன செய்யுமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (சி)

## ஐ. தே. க.

தல் முக்கியமானதல்ல பிரேமதாசா கொலை தொடர்பான பூரண விசாரணையே தேவை முதலில் அது எந்தத் தலையீடுமின்றி நடைபெற வேண்டும் என்பதே எமது விருப்பம் என அவர்கள் தெரிவித்தனர்.

## தேர்தலில்

மத்திய மாகாணசபை முதலமைச்சர் மீது கடந்த வருட இறுதியில் கொண்டுவரப்பட இருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தொடர்ந்து சதாசிவம் பதவி நீக்கப்பட்டது தெரிந்ததே.

அத்தோடு அமைச்சர் செல்லச்சாமியிடம் தனித்துப் பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தொண்டமானுடன் அனுசரித்துப் போகுமாறு கோரியதாகவும் தெரியவருகிறது.

இதே சமயம், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல் ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப்பைச் சந்தித்து அநுரா பண்டாரநாயக்கா பேச்சுக்கள் நடத்தியுள்ளார். இப் பேச்சு வார்த்தையின் போது தேர்தலில் முஸ்லிம்களின் ஆதரவை ஐ. தே. க. விற்குப் பெற்றுக் கொடுக்கும் சாத்தியப் பாடுகள் பற்றி ஆராயப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச் சந்திப்பின் போது ஐ. தே. க பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகராவும் கலந்து கொண்டதாக அறியவருகிறது.

## தமிழர்

களைத் தமது பாதுகாவலர்களாக கருதுகின்றனர். அங்கு புலிகளுக்கும் மக்களுக்குமிடையில் சிறந்த நல்லுறவு இருக்கிறது என மேலும் அவர் தெரிவித்தார்.


பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்று 30-0 வியாழக்கிழமை மாலை 3. 00 மணிக்கு கல்வி காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் இடம்பெற ளது. நல்லூர் பிரதேசத்தில் உள்ள அனைத்து வ தகர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளும அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

- நல்லூர் வணிகர் கழகம்

[சி-9704]



### மாபெரும் கலைவிழா
## பிற்போடப்பட்டுள்ளது

சுதுமலை கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ச நிலைய பாலர் பாடசாலை வளர்ச்சிக்கான வி யாட்டு போட்டியும், கலை விழாவும் 26-06-1994- நடைபெற இருந்தது இந் நிகழ்வு எதிர்பாராத காரணத்தினால் 09-07-1994 சனிக்கிழமை அன்று நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

நன்றி.

(பிற்போடப்பட்டமைக்கு தயவுசெய்து மன்னிக்கவும்.)

-நிர்வாகிகள்

(8690)



### காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன
## தொழிற் சங்கத்தின் பொதுக்கூட்டம்

இடம்:- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
காலம்:- 03-07-94 ஞாயிறு காலை 9. 00 மணி
விடயம்:- புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

**அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

தலைவர். (8683) செயலாளர்.



## கோழி பராமரிப்பாளர் தேவை

எமது கோழிப்பண்ணையில் கோழி பராம தற்கு மூன்று வருடம் அனுபவமுள்ள பராமரிப் ளர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மான கப்படும். 10-07-94 திகதிக்கு முன் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்பு கொள் வேண்டிய முகவரி,

வி- இ. 337
மே/பா. ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

(8689)